# வரிப்புலியே வாழ்த்த வா!

## (உதயநிதி பிறந்தநாள் – (நவம்பர் 27)




ஒருகவலை இனியில்லை
பெருங்கழகங் காப்பதற்கு!
ஓராயிரம் வீரர்கள்போல்
தோள்வலிமை பெற்றமகன்!
தேரோடும் திருவாரூர்
சீர்பெருமை பேசுதல்போல்
நீராடும் நங்கையர்க்கோ
நலம்பயக்கும் காவிரிபோல்
வராத மாமணியாய்
வந்துதித்தார் எம் உதயா!
தீராத எம்கவலை
தீர்ந்ததுபார் இவர்வரவால்!

இனிவீராதி வீரரெல்லாம்
வீழ்ந்திடுவர் போர்க்களத்தில்!
தீராத பகைநெருப்பை
மென்றிடுவார்! தின்றிடுவார்!
வென்றிடுவார் கொடும்பகையை!
திராவிடத்தை, கழகத்தைத்
தோள்தூக்கி நடத்திடுவார்!
திராவிடத்துப் புகழ்பேசும்
திண்டோளார் பெரியாரைத்
தமிழ்த்தலைவர் அண்ணாவைத்
தண்டமிழார் கலைஞரையும்
தாரணிக்கே எடுத்தோதத்
தனிப்பெருமை எழுதிடவா!
திராவிடத்துத் திருவிளக்காம்
திருக்குவளை மண்புகழார்
தளபதியார் சாதனையைப்
பார்வியக்கப் பாடிடவா
பண்பாட்டுப் பெட்டகமே!
ஒன்றியத்தின் மனஇருட்டை
அறிவாயுத ஒளிவிளக்கால்
அடலேறே விரட்டிடவா!
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்
உலகத்தை நடத்திடவா!
உணர்த்திடவா! உடன்பிறப்பே!
சனாதனத் தர்மத்தைத்
தகர்த்திடவா! பகுத்தறிவே!

மாவீரர் உதயநிதி
மகிமைக்கு நீ விளக்கு!
குறித்துக் கொள் கொள்கையரே!
நெஞ்சத்தில் நிலைநிறுத்து
நெடும்படைக்கே உறுதிசெய்!
வஞ்சகரை வம்பர்களை
வரிப்புலியாய் பாய்ச்சல் செய்!
வாய்ப்பேச்சு வீணர்களை
பொய்யர்களை புரட்டர்களை
புல்லுருவிப் புல்லர்களை
புதைக்கப்போர்களம்தேடு!
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்
ஆரியத்தைப் சிதைத்திடுக!
உலகத்தை விழிக்கச்செய்!
உணர்த்திடுவாய் உடன்பிறப்பே!
மாவீரர் உதயநிதி
மணிவேந்தர் பின்தொடரப்
பூநாடும் வண்டுகள்போல்
போர்ப்பரணி பாடிடத்தான்
புறப்பட்டாய் புலிப்போத்தே!
குலக்கொழுந்தே! கொடிமரபே!
திறம்படைத்த திண்டோளே!
பிறந்தநாள் காண்கின்றார்
மறத்தமிழர் வழிவந்த
மாவீரர் உதயநிதி!
பறந்துவா பரம்பரையே!
போற்றுவோம் பணிஎங்கும்
ஆற்றுவோம்! ஏற்றுவோம்
புவனமெங்கும் புகழ்க் கொடியை!
பல்லாண்டு பாடிடுவோம்
வரியிளையோ வா!வா!வா!..



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க தீர்மானக் குழுத் தலைவர்

டெல்லியில் போராட்டம் நடத்திய விவசாயிகளை சந்திக்காதது ஏன்?

# பஞ்சாப், அரியானாவில் மாநாடு நடத்த மோடி தயாரா?

## தஞ்சை விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. கேள்வி!

தஞ்சை, நவ.27-

டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க., அரசை கண்டித்து, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க., விவசாயத் தொழிலாளர் அணி செயலாளரும், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினருமான அன்னியூர் சிவா பேசியதாவது :

டெல்டா பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை. இந்த கோட்டையை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று, தீபாவளியின்போது மழை பெய்தபோது, எடப்பாடி பழனிச்சாமியை அழைத்து வந்து, முன்னாள் உணவுத் துறை அமைச்சர் காமராஜ், நெல் எல்லாம் முளைத்து விட்டது' என ஒரு நாடகத்தை நடத்தினார்.

ஆனால், திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர், 'நான் டெல்டா காரன்' என்று சொல்லி விவசாயிகளை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார். போலி நாடகம் போடுகிற பச்சைத் துண்டு பழனிசாமி, அவரது ஆட்சியின்போது 5 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு போக்குவரத்துக்கான டெண்டரை சட்டத்தை மீறி ஒப்பந்தம் போடப்பட்டது. அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்காமல் ரத்து செய்தது. தமிழக அரசு ஒப்பத்தை விட 30 சதவீதம் குறைவாக நிர்ணயம் செய்தது.

### பிரதமர் விவசாயிகளை சந்தித்தது உண்டா?

அதேபோல், தமிழகத்தில் 38 மண்டலங்கள் தான் நுகர்பொருள் வாணிப கழகம் இருக்க வேண்டும். ஆனால், தமிழக விவசாயிகளின் காவலராக விளங்கும் முதல்வர், ஒன்றுபட்ட டெல்டா மாவட்டத்தில் கூடுதலாக ஒரு மண்டலத்தை ஏற்படுத்தி, 39 மண்டலங்களை உருவாக்கி, இன்றைக்கு நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

விவசாயிகளை பாதுகாக்கிறேன், விவசாயிகளை பார்க்க வருகிறேன் என கூறிக் கொண்டு கோவை மாவட்டத்தில் வந்து இறங்கி, ஏதோ நான்கு பேரை வைத்து, அவரது புகழ் பாட வைத்த பிரதமர் மோடி, பஞ்சாப் , அரியானா மாநிலங்களில் விவசாயிகள் மாநாடு நடத்த துணிச்சல் உண்டா ? டில்லியில் 40 நாட்கள் போராட்டம் நடத்தி எலிக் கறி சாப்பிட்ட விவசாயிகளை நேரில் சந்தித்தது உண்டா?

விவசாயிகளுக்காக போராடுகிறேன் என்று சொன்ன பழனிசாமி, ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று உதய் மின் திட்டத்தில் கையெழுத்து போட்டார். இதனால் நாம் பயன்படுத்துகின்ற இலவச மின்சார திட்டத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது.

### தி.மு.க. போராட்டம்!

தமிழகத்தில் கடந்த 1991



ம் ஆண்டு இலவச மின்சார திட்டத்தை, அப்போதைய முதல்வர் ஜெ., ரத்து செய்தார். அதனை கண்டித்து தமிழகம் முழுவதும் கட்டை வண்டி போராட்டம் நடந்தது. தஞ்சை மண்டலத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி தலைமையிலும், திருச்சியில் தி.மு.க., முதன்மை செயலாளர் அமைச்சர் நேரு தலைமையிலும், விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடி தலைமையிலும் சாலை மறியல் போராட்டம் நடந்தது. அப்போது போலீசார் நடத்திய தடியடியில் தி.மு.க. ,வினர் ரத்தம் சிந்தினோம். இதன் பிறகு மீண்டும் இலவச மின்சாரம் கிடைத்தது.

தி.மு.க.வைப்போல், பழனிசாமியோ, அவரது கட்சியினரோ விவசாயிகளுக்கு இந்த திட்டத்தை செய்திருக்கிறோம் என்று சொல்லத் தகுதியற்றவர்கள். இன்றைக்கு தஞ்சாவூர் பகுதியில் பழனிசாமி வந்து, மழையில் சிந்திய விவசாயிகளின் நெற்கதிர்களை எடுத்து, முளைத்திருக்கிறது என போட்டோ ஷூட் செய்துவிட்டு போயுள்ளார்.

மத்தியக் குழு வந்தது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிக கழக இயக்குநர், மழையால் பாதித்த அனைத்துப் பகுதிகளை பார்வையிட செய்தார். அப்போது, தமிழக அரசு நெற் பயிர்களை பாதுகாப்பாக குடோன்களில் வைப்பதற்கு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்திருப்பதாக மத்திய அரசு குழுவினர் சான்றிதழ் அளித்துவிட்டுச் சென்றனர்.

### எடப்பாடியின் காதுகளில் விழவில்லையா?

இதன் பின்னர், 22 சதவீத ஈரப்பத நெல் கொள்முதல் செய்வதற்கு அனுமதிக்க முடியாது என தெரிவித்துவிட்டனர். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு, இது தெரியவில்லையா. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தொலைக்காட்சியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னீர்களே, அதேபோல், விவசாயிகளின் குரல் உங்களின் காதுகளில் விழவில்லையா ?

ஆனால், தமிழக முதல்வர் சட்டரீதியாக போராடி விவசாயிகளுக்கு 22 சதவீத ஈரப்பத நெல் கொள்முதல் செய்வதற்கு உத்தரவைப் பெற்றுத் தருவார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்பதற்கு தொடர்ந்து தி.மு.க., போராட்டம் ஓயாது.

இவ்வாறு அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. பேசினார்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழா: நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், நவ. 27-

வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலிந்தோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடிட வேண்டுமென கழகத்தினரை கேட்டுக்கொண்டு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

சமத்துவ பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அடியொற்றி அரசியல் களத்தில் கழக இளம் தலைவராக கழக இளைஞர் அணி செயலாளராக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சராக, துணை முதல்வராக பன்முகத்தன்மையோடு செம்மையான முறையில் பணியாற்றி திராவிட மாடலின் நீட்சியாக இன்று தன்னை நிலை நிறுத்தி கொண்டு எதிர்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் உதயநிதிஸ்டாலின் அவர்களின்



47வது பிறந்தநாளில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இன்று (27.11.2025 - வியாழக்கிழமை) பகல் 12.00 மணியளவில் ஏழை, எளியோர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அறுசுவை அசைவ பிரியாணி விருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. மேலும் தெற்கு மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் கழக நாளேடான முரசொலி நாளிதழில் அறிவிப்பு செய்தபடி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் சார்பில் பல்வேறு விதமான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

எனவே மேற்படி நிகழ்சிகளில் மாவட்டதிற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர், செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்க்கிளை நிர்வாகி கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், பொது மக்கள் ஆகியோர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்ட பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

# கரூர் மாவட்ட நூலகத் துறையில் 5 மாநில விருதுகள்!

## விருது பெற்றவர்களுக்கு வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பாராட்டு!

கரூர், நவ.27.

2024 - 25 ஆம் நிதியாண்டில், மாநில அளவில் அதிக நன்கொடை பெற்றமைக்கும், அதிக நூலக உறுப்பினர்கள் சேர்த்தமைக்காகவும், கரூர் மாவட்ட மைய நூலகம் இரண்டு விருதுகளையும், மாநில அளவில் அதிக நன்கொடை பெற்றமைக்காக தாந்தோணி முழு நேரக் கிளை நூலகம், திருக்காடுதுறை ஊர்ப்புற நூலகம் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த நூலகத்திற்கான விருதும், பொது நூலகத்துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக குளித்தலை முழு நேரக் கிளை நூலக மூன்றாம் நிலை நூலகர் ப.முரு காம்பாளுக்கு டாக்டர் எஸ் .ஆர். அரங்கநாதன் விருது ஆகியவற்றை தமிழ்நாடு அரசு வழங்கியது. விருது பெற்றவர்கள் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜியை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.






இளைஞர் எழுச்சி நாள்! நவம்பர் 27 முதல் டிசம்பர் மாதம் முழுவதும்


# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, நவ. 27-

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:-

கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழா நவம்பர் 27ஆம் தேதி மிக சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட இருக்கிறது இதை அடுத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும் எனவும், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி கிளைகள், நகராட்சி வார்டுகள், பேரூராட்சி வார்டுகள் தோறும் நவம்பர் 27ஆம் தேதி முதல் தொடங்கி டிசம்பர் மாதம் முழுவதும் கழக கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா புத்தகங்கள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்தும், மரக்கன்றுகளை வழங்கி மரக்கன்றுகள் நட்



டுவைத்தும் ஆதரவற்றோர், முதியோர், இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கியும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சீரும் சிறப்புமாக கொண்டாட வேண்டும்.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் அனைவரும் அவர் அவர் பகுதிகளில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கந்திலி ஒன்றியம் குனிச்சி ஊராட்சி சின்னகுனிச்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.8.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை மக்களின் பயன்பாட்டிற்காக சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி திறந்து வைத்தார். உடன் கே.ஏ.குணசேகரன், திருமதி திருமுருகன், சி.கே.சுப்பிரமணி, ஜி.மோகன்குமார் ஆகியோர் உள்ளனர்.